# தமிழ்நாடு முழுவதும் பேரறிஞர் அண்ணா நினைவு நாள் - மலரஞ்சலி!



பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு தினத்தை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டம் மங்களூர் தெற்கு ஒன்றியம் லட்சுமணாபுரத்தில் உள்ள அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் சி.வெ. கணேசன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மங்களூர் கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர் பட்டூர்.வீர. அமிர்திலிங்கம் மங்களூர் தெற்கு ஒன்றியக் கழக செயலாளர் பா. செங்குட்டுவன் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே.என்.டி.சங்கர், குமணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 56வது நினைவு தினத்தையொட்டி சேலம் நகர பஸ் நிலையம் அருகேயுள்ள அண்ணாவின் சிலைக்கு மேயர். ஆ . ராமச்சந்திரன் மாலை அணிவித்தார். உடன் மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே. சுபாசு. மு. கார்த்திகேயன் தலைமைச்செயற்குழு உறுப்பினர்கள். சி.ராஜேந்திரன். கே.டி. மணி. தாமரைக்கண்ணன். 'மாநகர செயலாளர். பா.ரகுபதி துணைச்செயலாளர்கள். வி.கணேசன், தினகரன்.கோமதி. பொருளாளர். எம். எம்.ஷெரீப். பொதுக்குழு உறுப்பினர்கள். பி.அசோகன். சா.சுப்பிரமணி, அயலக அணி மாநில துணைச் செயலாளர் உமாராணி, பகுதி செயலாளர்கள். தமிழரசன். கே. ஜெய். கே.டி.ஆர்.தனசேகரன், முருகன்,"'மீனவர் அணி. சீனிவாசன். விவசாய அணி பாரதிராஜா, மாநில தொண்டர் அணி துணைச்செயலாளர். பா. கோமான். தொமு.ச. பழனியப்பன். அண்ணா நற்பணி மன்ற செயலாளர். கே. குமாரசாமி. சங்கீதர நீதிவர்மன். ராஜேஸ்வரி பாலாமணி. சேலம் வடக்கு ஒன்றிய செயலாளர். ரெயின்போ நடராஜன். வீரா. பழனியப்பன். ஜி.வெங்கடேசன். இப்ராகீம் சுரேந்திரன் உட்பட கழக நிர்வாகிகள். 'மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மயிலாடுதுறை பேருந்து நிலையம் அருகே உள்ள அண்ணா சிலைக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமையில் கழகத்தினர் அமைதி பேரணியாக சென்று சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.செல்வமணி, ஒன்றியக் கழகச் செயலளார்கள் அமிர்த.விஜயகுமார், பொதுக்குழு உறுப்பினர் பி.சிவதாஸ் மற்றும் பலர் பங்கேற்றனர்.



பேரறிஞர் அண்ணாவின் 56 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தஞ்சை தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் பட்டுக்கோட்டையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ தலைமையில் அண்ணா திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பழஞ்சூர் கே.செல்வம், மாவட்ட துணைச் செயலாளர்கள் பொன்.சத்தியமூர்த்தி, ரமேஷ் உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய கழக செயலாளர்கள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.





பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் தாராபுரம் வடதாரையில் இருந்து ஊர்வலமாக சென்று நகராட்சி முன்னாள் அலுவலகம் முன்பு அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாவட்ட துணை செயலாளர் பிரபாவதி பெரியசாமி, நகர செயலாளர் எஸ்.முருகானந்தம், ஒன்றிய செயலாளர், ஒன்றியக்குழு முன்னாள் பெருந்தலைவர் எஸ்.வி.செந்தில்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், பொதுக்குழு உறுப்பினர் கே.என்.கருணாகரன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சரஸ்வதி ராஜேந்திரன், வழக்கறிஞர் அணி மாவட்ட தலைவர் கே.செல்வராஜ், நகர்மன்ற தலைவர் கு. பாப்புகண்ணன் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழக செயலாளர்கள், கழக இன்னாள், முன்னாள் நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் இன்னாள், முன்னாள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் இன்னாள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் கழக தோழர்கள், பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணாவின் 56வது நினைவு நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், வி.சி.சந்திரகுமார், குறிஞ்சி என்.சிவக்குமார், ஈரோடு இறைவன், மாவட்ட கழக நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், செல்லப்பொன்னி, க.சின்னையன், ப.க.பழனிசாமி, மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், மேயர் நாகரத்தினம், பகுதி கழக செயலாளர்கள் பொ.ராமசந்திரன், அக்னி சந்துரு, குறிஞ்சி என்.தண்டபாணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம், தொ.மு.ச. கோபால், செ.தங்கமுத்து, மதன் மோகன், தலைமைக் கழக பேச்சாளர்கள் பவானி கண்ணன், ஈரோடு இளைய கோபால் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் தலைமையில் வாழப்பாடியில் உள்ள மாவட்ட அலுவலகம் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் முன்பு அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்ட அவைத் தலைவர் முரா. கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ. சீனிவாசன் அப்பாதுரை, பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் தமிழ்செல்வன், சங்கர், கோபால், ராஜா, முத்துலிங்கம், சோமசுந்தரம், மனோகரன், ஒன்றிய செயலாளர்கள் உமாசங்கர், மாணிக்கம், வெண்ணிலா சேகர், விஜயகுமார், ரத்தினவேல், ராஜேந்திரன், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், மூர்த்தி, சிவராமன், தங்க மருதமுத்து, டாக்டர் செழியன், மணி, பாலமுருகன், சித்தார்த்தன், அழகுவேல், நகர செயலாளர் பாலசுப்பிரமணியம், பேரூர் செயலாளர்கள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





நாகை மாவட்டம் நாகை நகர தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு நாளை முன்னிட்டு நாகை பாரதிமார்கெட் அருகே உள்ள அண்ணா சிலைக்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் இருந்து அமைதி பேரணி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து நாகை வடக்கு ஒன்றியம் புத்தூரில் அண்ணா சிலைக்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் மாலை அவித்து மரியாதை செலுத்தப்பட்டது. உடன் நாகை வடக்கு ஒன்றியச் செயலாளர் சிக்கல் என்.ஆனந்த், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கேஸ் வி.செந்தில், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.வினோத் மற்றும் பலர் உள்ளனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளை முன்னிட்டு, குன்னூர் பேருந்து நிலையம் அருகிலுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக், குன்னூர் நகர செயலாளர் எம்.ராமசாமி மற்றும் கழக நிர்வாகிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.



பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 56 ஆவது நினைவு நாளையொட்டி, மாவட்ட பொறுப்பு அமைச்சர் வி.செந்தில்பாலாஜி வழிகாட்டுதலில்,கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் ex.எம்எல்ஏ., தலைமையில்,கோவை சித்தாபுதூர் வி.கே.கே.மேனன் சாலையில் இருந்து அமைதி ஊர்வலம் புறப்பட்டுச் சென்று, கோவை காந்திபுரத்தில் உள்ள,பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் ex.எம்எல்ஏ., பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலை அருகில் வைக்கப்பட்டிருந்த,பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.இந்நிகழ்வில், மாநகர் மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.